# அரசாங்க அறிவித்தல்
# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
# நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2022ம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் **2021-11-09ந்** திகதி தொடக்கம் **2021-12-09ந்** திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது WWW.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2021-12-09** திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4" ) இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022"** எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2021-12-09** திகதிக்கு முன்னர் கிடைக்கபடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| **ஒப்பந்த தொகை** | **பதிவுக் கட்டணம்.** |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

## பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்

**பொருட்கள்**

- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகம்
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- பலசரக்கு, சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
- அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்
- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்
- துணி வகைகள்
- தளபாடங்கள்
- விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள்
- மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்.
- சூரிய மின்கலங்கள் மற்றும் திருத்தங்கள்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

**வேலைகள்**

- கட்டிடங்கள்,
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**

- சுத்திகரிப்பு சேவை
- பாதுகாப்பு சேவை
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை
- படப்பிடிப்பு சேவை
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஏனைய சேவைகள்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்ட செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.